# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.3/2016

Deposition of witness – PW20

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ் | Caste | : |
| S/o. | : தங்கவேலு | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 15.12.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A1 and A2 present.

முதல் விசாரணை;

நான் ரெட்டிப்பட்டியில் குடியிருக்கிறேன். நான் கார் கம்பெனியில் மேனேஜராக வேலை செய்து வருகிறேன். 22.12.2014 அன்று நான் 5 ரோட்டில் உள்ள Hyundai கம்பெனியில் ஸ்டோர் இன்சார்ஜ்–ஆக வேலை செய்து வந்தேன். அன்று காலை சுமார் 10.00 மணிக்கு மேல் எனது உறவினர் போன் மூலம் எனது அக்கா சரோஜா, மாமா ராஜா, கைகுழந்தை தனலட்சுமி ஆகியோர் ஆதார் அட்டை எடுப்பதற்காக கொண்டலாம்பட்டியிலிருந்து இருசக்கர வாகனத்தில் ராசிபுரம் நோக்கி சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது சந்தியூர் ஆட்டையாம்பட்டி

பிரிவு அருகே இருசக்கர வாகனத்தில் இடது ஓரமாக சென்று கொண்டிருந்தபோது எதிரே நாமக்கல்லிலிருந்து சேலம் நோக்கி வந்த மணல் ஏற்றி வந்த டிப்பர் லாரி எதிரே வந்த ஜோதி பஸ்சை இடித்துவிட்டு எனது அக்காவும் மாமாவும் வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி அருகே உள்ள வயலில் டிப்பர் லாரி நின்றுவிட்டதாகவும், எனது அக்காவும், மாமாவும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், குழந்தையை காணவில்லை என்று தேடியபோது குழந்தை மணலுக்குள் புதைந்து இருந்துள்ளதாகவும், குழந்தையை எடுக்கும்போது உயிர் இருந்துள்ளதாகவும். அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு வரும்போது உயிர் பிரிந்துவிட்டது என்று எனக்கு தகவல் சொன்னார். அதன்பின்னர் நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்து குழந்தையை பார்த்தேன். குழந்தை இறந்திருந்தது. பின்னர் போலிசார் பிரேத விசாரணை செய்தார்கள். அப்போது நான் உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.